# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 67 பிரசோற்பத்தி தை 19 (02 . 02 . 1992) ஞாயிறு



02 .02 1992


### பாரிஸ் மாநாட்டில் இலங்கைச் சம்பவங்கள்

பாரிஸில் இம் மாதம் 7ஆம் திகதி நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பிரஸ்தாபிக்கப்படும் என வெளிநாட்டுச் செய்திகள் கூறுகின்றன. இதனால் இலங்கைக்கு இம்முறை கிடைக்கும் நிதியுதவி குறைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளின் அதிரடித் தாக்குதலால் வங்காலையில் 7 இராணுவம் பலி

## முகாமிலிருந்து 500யார் தூரத்தில்சம்பவம்

மன்னார்ப்பகுதியில் உள்ள வங்காலையில் நேற்றுக்காலை இராணுவ அணி ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் ஏழு சிப்பாய்கள் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர் படையினரின் ஆறு நவீன ரக துப்பாக்கிகளும் புலிகளால் கைப்பற்றப்பட்டன பலர் காயமடைந்தனர்.

வங்காலையில் வீதித்தடைகளை அகற்றுவதற்காக முகாமிலிருந்து 30 பேர் கொண்ட படை அணியொன்று வந்து கொண்டிருந்தபோதே விடுதலைப்புலிகளால் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

இராணுவ முகாமிலிருந்து 500யார் தூரத்தில் வைத்து 10நிமிடங்கள் வரை இத்தாக்குதல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த சிப்பாய்கள் முகாமுக்குத்தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## கேட்கப்படும் முத்திரைகள் அனுப்பிவைக்கப்படுவதில்லை

யாழ். மாவட்டத் தபாற்கந்தோர்களுக்கு தபாற் திணைக்களம் போதியளவு முத்திரைகள், வான்கடிதங்கள் என்பனவற்றை அனுப்புவதில்லையென்று தபாற்கந்தோர்களில் இருந்து தெரியவருகிறது.

கொழும்பிலிருந்து கப்பலில் வரும் தபாற் பொதிகளுடன் யாழ் மாவட்டத்திலுள்ள தபால் நிலையங்களுக்குகுறைவான முத்திரைகள், வான் கடிதங்களே வந்துசேர்கின்றன.

கொழும்பிலுள்ள பிரதம தபால் நிலையத்துக்கு யாழ் தபாற் பகுதியினர்முத்திரைத் தேவை பற்றி அடிக்கடி அறிவித்துவருகிற போதிலும் தபாலகங்கள் கேட்டும் முத்திரைகள், வான் கடிதங்கள் அரைவாசிக்கு குறைந்த பெறுமதி கொண்ட முத்திரைகள்


— 04 ஆம் பக்கம் பார்க்க


## நலன்புரிச்சங்கத்தின் அம்புலன்ஸ் சேவை ஆரம்பம்

யாழ் பொது மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கம் தனது அம்புலன்ஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

1987 ஆம் ஆண்டு அக்டோபரில் ஏற்பட்ட இந்திய இராணுவ நடவடிக்கையின் பின்னர் பழுதடைந்திருந்த இந்த அம்புலன்ஸ் வண்டி தற்போது திருத்தப்பட்டுள்ளது.

நாளை 3 ஆம் திகதி திங்கள் முதல் அம்புலன்ஸ் சேவை நடைபெறவுள்ளது. 07

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசாங்கமும் புலிகளும் ஐ. நா. உதவியை நாடவேண்டும்

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு ஐக்கியநாடுகள் சபையின் உதவியை இலங்கை அரசும், புலிகளும் கோர வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

வட அமெரிக்காவில் வாழும் தமிழ் கல்விமான்கள் குழுவொன்று இவ் வேண்டுகோளை விடுத்திருக்கிறது.

வேறுசில நாடுகள் மத்தியஸ்தம் செய்ய முன்வந்த போதிலும் அவை கை கூடவில்லை. அமைச்சர் தொண்டமானின்


— 04 ஆம் பக்கம் பார்க்க


## சிங்களத்திரைப்படம் திரையிடத் தடை

பிரபல சிங்களத்திரைப்பட நடிகை மாலினி பொன்சேகா நடித்த 'சந்த மண்டல' என்ற சிங்கள திரைப்படத்தை அரசு திரையிடத் தடை செய்துள்ளது.

கண்டியில் உள்ள வாவியில் உத்தரவின்றி இந்த திரைப்படக்காட்சிகள் சில படமாக்கப்பட்டதே இதற்குக்காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது

## போக்குவரத்துச் சபை: மக்கள் மயப் படுத்தப்பட்டபின் ஊழல் பெருகிவிட்டது

ஸ்ரீலங்கா மத்திய போக்குவரத்துசபை மக்கள் மயமாக்கப்பட்டதையடுத்து 12000 தொழிலாளர்கள் வேலையை விட்டு விலகினர் எனவும் அவர்களுக்குரிய கொடுப்பனவுகள் இதுவரை செய்யப்படவில்லையென்றும் தொழிற்சங்கம் குற்றம் சாட்டியுள்ளது

மக்கள்மயமாக்கப்பட்டபின் போக்குவரத்து சேவையை நடத்தும் புதிய நிறுவனங்களில் ஊழல் மலிந்துள்ளதாகவும். பண மோசடிகள் நிகழ்வதாகவும் தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

போக்குவரத்து சபைக்குச்


— 04 ஆம் பக்கம் பார்க்க


## தீவக அகதிகளுக்கு இலவச பால்மா வகை

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளவர்களின் குழந்தைகளுக்கு வேலணை பிரதேச சபையினர் இலவசமாக லக்டோஷன் பால்மாவை வழங்கியுள்ளனர்.

இப்பிரதேச சபையினது விசேட ஆணையாளர் இ. இளங்கோவன் அகதி முகாம்களுக்கு நேரில் சென்று இவற்றை வழங்கினார். 19

## சிங்களப் பகுதிகளில் தமிழ்க் குடியேற்றம்

திருகோணமலைக்கு கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட தமிழ் அகதிகள் சிறிமாபுரம்


— 04 ஆம் பக்கம் பார்க்க


## லலித் பேச்சு ஜனசக்தி என்ற பெயரில் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள்

ஜனசக்தி என்ற பெயரில் ஏழை மக்களின் கூப்பன்களை இந்த அரசு பறிக்கிறது.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி மருதானையில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் கூறினார்.

அண்மையில் தான் அநுராதபுர பகுதிக்கு சென்றபோது ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு ஆதரவு குறைந்துள்ளதை காணமுடிந்தது


... 04 ஆம் பக்கம் பார்க்க


## மனித உரிமைகளை சீனா மதிக்கவேண்டும்

மனித உரிமைகளை மீறாது சீனா சமாதானத்துடன்செயற்பட வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி புஷ் கேட்டுக் கொண்டார்.

ஐ நா. பாதுகாப்புச் சபையின் சட்டத்தில் கலந்து கொள்ளவந்த சீனப்பிரதமர் லீ பெங்னும் புஷ்ஷும் சந்


— 04 ஆம் பக்கம் பார்க்க


## பிரதமர் ராவ்-புஷ் அமெரிக்காவில் பேச்சு

இந்தியப் பிரதமர் நரசிம்மராவும் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் நேற்று முன்தினம் வாஷிங்டனில் சந்தித்து பேச்சு நடத்தினர்.

பேச்சுகளின் போது அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் குறித்தே அதிகம் பேசப்பட்டதாகவும் தெரிவிக்கப்


— 04 ஆம் பக்கம் பார்க்க


## யாழ். குடாக்கடலில் படையினர் மீனவர் மீது தினமும் தாக்குதல்

யாழ்ப்பாணக் குடாக் கடற் பரப்பில் ரோந்து புரியும் படையினர் மீனவர்கள் மீது தினமும் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர்.

மண்டைதீவு, கல்முனைக் கடற் பரப்பில் மீனவர்கள்


... 04 ஆம் பக்கம் பார்க்க


## நயினாதீவு பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

நயினாதீவில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு கடந்த மூன்று மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

வேலணை கோட்டக்கல்வி அலுவலகத்திற்கும், நயினாதீவு கொத்தணி அதிபருக்கும் இடையில் எதுவித தொடர்பும் இல்லாத காரணத்தால்


... 04 ஆம் பக்கம் பார்க்க


## தமிழக கர்நாடக போக்குவரவு ஆரம்பம்

தமிழ் நாட்டுக்கும் கர்நாடகத்துக்கும் இடையில் வாகன போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் தமிழர்கள் கர்நாடகம் திரும்ப அச்சம் தெரிவிப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## மனித உரிமை மீறல்பற்றி கனேடியகுழு அரசபடைகளின் அட்டூழியம் மக்களைப் பாதித்துள்ளது

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் படையினரால் மேற்கொள்ளப்படுகின்றன. அரசாங்கப்படைகளுடன் சேர்ந்து அதிகாரமளிக்கப்படாதபடையினரும் பொதுமக்களைக் கைது செய்வதிலும், சித்திரவதை செய்வதிலும் கொலை செய்வதிலும் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றி அறியவந்த கனடாக்குழு தெரிவித்துள்ளதாக பி.பி.ஸி. அறிவித்தது. இலங்கையில் 8 நாள்கள் தங்கியிருந்து பல பொதுத்தரப்பினரிடமிருந்தும் திரட்டப்பட்ட தகவல்களின் அ[illegible]டையில் வெளியான [illegible] மேலு[illegible]


—0[illegible] ம் பார்க்க

இன்று முதல் புதிய நடைமுறை

# வவுனியா சிவில் பகுதியில் வசிப்போர் பொலிஸில் தம்மைப் பதியப் பணிப்பு!

## நகருக்குச் சென்று வருவோரும் அனுமதி பெறவேண்டுமென அறிவிப்பு

வவுனியாமாவட்டத்தில் சிவில் நிருவாகத்திலுள்ள பகுதிகள் என அரசால் கூறப்படும் இடங்களில் வசிக்கும் நிரந்தர, தற்காலிக குடியிருப்பாளர்கள் அனைவரும் தம்மைப் பொலிஸில் உடனடியாகப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென அரசு அறிவித்துள்ளது.

அத்துடன் வவுனியா நகருக்கு பிற பகுதிகளிலிருந்து வந்து செல்வோரும் பொலிஸ அனுமதி பெற்றாக வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தடைமுகாமில் தம்மைப் பதிந்து, வவுனியா நகருக்குள் செல்வதற்கு தற்காலிக அனுமதி அட்டையைப் பெறல் வேண்டுமெனவும் பணிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய நடைமுறை இன்று முதல் அமுலுக்கு வருவதாக வவுனியா பொலிஸ் அதியட்சகர் அறிவித்துள்ளார்.

மாஜிக் நிபுணர் சவால்

## 'கல்கத்தா ரயிலை பட்டப்பகலில் மறைத்துக் காட்டுவேன்!'

பிரபல மாஜிக் நிபுணர் பி. சி. சொர்கார் பம்பாய்-கல்கத்தா மெயில் ரயிலை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் வைத்துப் பட்டப்பகலில் மாயமாக மறைத்துக் காட்டப் போவதாகப் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதம் இச்சாதனையைப் புரியப் போவதாக அவர் அறிவித்துள்ளார். (14)

## தடை!

பாகிஸ்தானில் சிறுமிகளுக்கு நடனம் கற்பிக்கும் ஆசிரியைகள் அனைவரும் வேலை நீக்கம் செய்யப்படவுள்ளனர் என பாகிஸ்தான் கல்வி அமைச்சர் எச்சரித்துள்ளார். முஸ்லிம் கலாசாரம் நாட்டில் பேணப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## மனிதரின் இருதயத்துக்குப் பதிலாக பன்றியின் இருதயம் பரீட்சார்த்த முயற்சி வெற்றி

மனிதரின் இருதயத்துக்குப் பதிலாக பன்றியின் இருதயத்தை மாற்றீடாகப்பொருத்தும் முறை வெற்றியளித்திருப்பதாக தற்பொழுது கொழும்பில் தங்கியுள்ள பிரபல இருதய மாற்றுசத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் கிறிஸ்டீன் பெர்னாட் தெரிவித்துள்ளார்.

இருதய நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு சத்திர சிகிச்சை மூலம் பரிகாரம் காண முடியாத பட்சத்தில் அவரது இருதயத்துக்குப் பதிலாக பன்றியின் இருதயத்தை மாற்றீடாகப் பொருத்தக் கூடியதாகவிருக்குமெனவும் டாக்டர் கிறிஸ்டீன் தெரிவித்திருக்கிறார்.

## 'வாய் ஓயாமல் கத்துவார்கள் பரிகாரத்தைத் தர மாட்டார்கள்'

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும், நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமென வாய் ஓயாமல் சொல்கிறார்களே தவிர எவருமே அதற்கான உருப்படியான யோசனையை முன் வைக்க முன்வரவில்லை என இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போதே அவர் இப்படிக் கூறினார்

'நாங்கள் சில யோசனைகளை முன் வைக்கும்போது மட்டும் அதைப்பற்றி இப்போது பரவலாக விமர்சனம் செய்கிறார்கள்' எனவும் அந்த அமைச்சர் குற்றஞ் சாட்டினார்.

## 1991இல் கோப்பாயில் மட்டும் விசர்நாய்க்கடிக்கு 15 பேர் பலி!

கோப்பாய் சுகாதார அதியட்சகர் பகுதியினர் இப்பகுதியில் சுகாதாரக் குழுக்களை அமைத்து தமது எல்லைக்குட்பட்ட பல்வேறு பகுதியிலும் சுகாதாரக் கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றனர்.

தற்போது இப் பகுதிகளில் பரவிவரும் நோய்களைத் தடுப்பதற்கான முறைகள் விசர்நாய்க் கடியில் இருந்து பாதுகாப்புப் பெறும் முறைகள் பற்றியும் இக் கருத்தரங்குகளில் விளக்கமளிக்கப் பட்டுவருகின்றது.

கடந்த வருடம் கோப்பாய் சுகாதார அதியட்சகர் பிரிவுப் பகுதியில் மட்டும் பதினைந்து பேர் விசர்நாய்க்கடியினால் மரணமடைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (35)

## ராஜீவ் கொலை வழக்கு மார்ச் முற்பகுதியில் ஆரம்பமாகும்!

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கு மார்ச் மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதற்கான குற்றப் பத்திரிகைகளைத் தயாரிக்கும் வேலைகளை இந்திய விசேட புலனாய்வுத் துறையினர் பூர்த்தி செய்திருப்பதாக இந்தியத் தகவலொன்று தெரிவிக்கின்றது.

ஊனமுற்றோர் உலக தினம்

## அங்கவீனமுற்றோருக்கு தொழில்வாய்ப்புப் பயிற்சிகள்!

உலக ஊனமுற்றோர் தினமான எதிர்வரும் 3-ம் திகதி திங்கட்கிழமை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையினரின் ஊனமுற்றோர்களுக்கான வேலை வாய்ப்புத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

தையல், தட்டச்சு, வாளி செய்தல், வாழைநார் பின்னுதல், வடகம், வடை தயாரித்தல், பன்னவேலை போன்ற துறைகளில் பயிற்சிகளை வழங்கி அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்படவுள்ளது. (16)

## புகையிலைச் செய்கை அதிகரிப்பு

யாழ் குடாப்பகுதியில் அநேக விவசாயிகள் புகையிலைப் பயிர்ச்செய்கையை அதிகமாக மேற்கொண்டுள்ளனர்.

## வடபிராந்திய வர்த்தக சங்க சமாஜம் அமைப்பு

வட பிராந்தியத்தில் உள்ள பல வர்த்தக சங்கங்களை ஒன்றிணைத்து வட பிராந்திய வர்த்தகர் சங்கச் சமாஜம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது

இந்த சமாஜத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ் வர்த்தகர் சங்கப் பணிமனையில் இடம்பெற்றது. (41)

## ஆங்கில ஆசிரியர்களுக்கு அதிர்ஷ்டம்! அதிக சம்பளம் நிலுவையுடன் கிடைக்கும்

01-01-88 இலும் அதன் பின்னரும் நியமனம் செய்யப்பட்ட ஆங்கில உதவி ஆசிரியர்களின் சம்பளத் திட்டம் தவறான சம்பளத் திட்டத்தின்படி பல கல்வி அலுவலகங்களில் நடைமுறைப்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1680- 15×480- 6×600- 27600 எனும் சம்பளத் திட்டத்தை இந்த ஆசிரியர்களுக்கு நடைமுறைப்படுத்தாமல் 01-01-88 இல் அல்லது அதற்குப் பின்னர் நியமிக்கப்பட்டிருந்தால் நியமனத் திகதியில் இருந்து 17280-14×480-6×600- 27600/- என வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கல்விச் சேவைக்குழுச் செயலாளர் ஏ. எல். வீரரத்ன சுற்றுநிருபம் மூலம் சகல மாகாண கோட்டக்கல்விப் பணிப்பாளர்களையும் பணித்துள்ளார்,

இச் சம்பள அளவுத் திட்டத்தினடிப்படையில் சம்பள நிலுவைகளையும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் மேலும் பணித்துள்ளார். (15)

## 75 கஷ்டப் பகுதிப் பாடசாலைகளாகப் பிரகடனம்!

## கிளி. மாவட்டத்திலுள்ள 81 பாடசாலைகளில்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 81 பாடசாலைகளில் 75 பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள் கஷ்டப் பிரதேச படியைப் பெறவுள்ளார்கள்.

இப்பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு கடந்த அக்டோபர் மாதம் முதல் கஷ்ட[illegible] படியை வழங்க வட[illegible] மாகாண சபை அங்[illegible]ங்கியுள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள 81 பாடசாலைகள் 6 பாடசாலைகள் நகரப் பாடசாலைகளாகவும், 47 பாடசாலைகள் மிகக் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளாகவும், 28 பாடசாலைகள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளாகவும் வட கிழக்கு மாகாண சபையினால் கணிக்கப்பட்டுள்ளன,

இதன் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 47 மிகக் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் தமது சம்பளப் பணத்தில் 15 வீதத்தினையும், 28 கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் தமது சம்பளத்தில் 10 வீதத்தினையும் சம்பளத்துடன் மேலதிக[illegible] பெறுவார்கள். (10)


## சிறுவிளம்பரம்

### ஜோதிட நூல்கள்

புத்தாண்டுப் பலன்கள், கருணைமழை பொழியும் பாபா, சாயி ஞானரகசியம், முற்பிறவி அற்புதங்கள் சோபிதா, ரகுநாதன் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். நூலாசிரியர் :-PROF. சத்தியதாஸன் (Mech E, Elect E) சித்தன்கேணிச் சந்தி. 02002

## பற்றீஷியன்

### தொழிற் பயிற்சி நிறுவனம்

### PATRICIAN INSTITUTES

அகில உலக கெயர் மரவேலை, கட்டுவேலை பயிற்சி நெறிகள்

அகில உலக கெயர் ஸ்தாபனத்துடன் (Care International) இணைந்து எம்மால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சித் தகைமை:**

15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்
8 ஆம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட தராதரமும்

**பயிற்சிக் காலம்:**

2½ மாதம் ஸ்தாபன பயிற்சி
10 மாதம் பயிலுனர் வேலையாளர் பயிற்சி

**கொடுப்பனவு**

ஸ்தாபன பயிற்சியின் போது மாதம் 600/- வும் 10 மாத பயிலுநர் பயிற்சியின் போது வேலைக்குப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும்,

விண்ணப்பங்கள் 06-02-1992 இற்கு முந்தாமல், பதிவாளர், பற்றீஷியன் தொழிற்பயிற்சி நிறுவனம். இல 59, செ‌ன். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஏனைய பயிற்சி நெறிகள்:

**புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன**

1. Computer Processing Courses
   1. d BASE III PLUS and MS-DOS
   2. LOTUS 1-2-3 and MS - DOS

☐ WEEK END CLASSES (Theory & Practicals)

2. Civil Draughtsmanship Course
3. City and Guilds of London Examination (Year 92, 93) Electrical, Electronic Engineer-ing Technician Course
   1. Part I & II  2. Part III

விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்கட்கு

Registrar
Patrician Institute of Higher Studies

வாகன தகுதிச் சான்றிதழ் புதுப்பித்தல்
Fitness Certificate for Motor vec hicle- 1992

1992 ஆம் ஆண்டுக்கான மோட்டார் வாகன தகுதிச் சான்றிதழ் திரு. A. S. குணசீலன் (Automobile Engineer) அவர்களால் எமது ஸ்தாபனத்தில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

REGISTRAR
Patrician Industrial Institute
59, St. Patricks Road, Jaffna.

02005

## ★ கருணாநிதி, முரசொலிமாறன் குற்றச்சாட்டு

ராஜீவ் கொலை தொடர்பாக **சிறையில்வைக்கப்பட்டுள்ளோரை**

# சித்திரவதைசெய்து வாக்குமூலம் பெற முயற்சி!

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் சென்னைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை பலவந்தப்படுத்தி ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற இந்திய சிறப்பு விசாரணைக்குழுவினர் முயல்வதாகக் கலைஞர் மு. கருணாநிதி குற்றம்சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவரெனக் கூறப்படும் குணா என்ற சந்தேக நபரைக் கடந்த வியாழக்கிழமை சென்னை சிறைச்சாலையில் மூடிய அறையொன்றில் வைத்து இரு சிறப்பு விசாரணைக்குழு அதிகாரிகள் சித்திரவதை செய்ததாகவும், அவரிடம் ஒப்புதல் வாக்கு மூலம் பெற முயன்றதாகவும் கருணாநிதி இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

இச் சம்பவத்தின் போது தடாச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யப்பட்ட மேலும் நான்கு சந்தேக நபர்களிடமிருந்தும் பலவந்தமாக ஒப்புதல் வாக்கு மூலம் பெற முயற்சிக்கப்பட்டதாகவும் கருணாநிதியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முரசொலிமாறனும் குற்றச்சாட்டு

ராஜீவ் கொலை தொடர்பாக பொய் வாக்குமூலம் தருமாறு சிறையிலுள்ள ஒருவர் பொலிஸ் அதிகாரிகளினால் கொடுமைப்படுத்தப் பட்டுள்ளார். இது குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக்கு றிப்பிடும் தந்திகளை தி. மு. க. பிரமுகர் முரசொலிமாறன் இந்தியப் பிரதமர், மத்திய உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளதாக மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

## உடன் தயாரிக்கக் கூடிய 'பனம்கூழ்' விரைவில் விற்பனைக்கு வருகிறது!

உடனடியாகப் பனம் கூழ்ப்பைத் தயாரிப்பதற்கான முறையொன்றைப் பனம் பொருள் அபிவிருத்திச் சபை இலங்கை விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் கண்டுபிடித்துள்ளது.

இந்த ஒடியல் கூழ் தயாரிப்பு தற்பொழுது பரிசோதனை முறையில் நடக்கிறது. விரைவில் அது விற்பனைக்கு விடப்படவுள்ளது.

உடனடியாகத் தயாரிக்கக் கூடிய இந்தப் பனம் கூழ்ப்பிற்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நல்ல கிராக்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பிறர்வலைகளில் இறால் திருடிய அறுவர் காவற்துறையினரால் கைது!

இரவு வேளைகளில் கடலில் மீன், இறால்களை வலைகளில் இருந்து திருடிச் செல்லும் கும்பல் ஒன்றினை அப்பகுதி சனசமூக நிலையத்தினரின் உதவியுடன் சாவகச்சேரி காவற்துறையினர் மறைந்திருந்து கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளனர்.

இக் கும்பலில் ஆறு நபர்கள் தற்போது விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

இச் சம்பவம் நாவற்குழி, கோவிலாக்கண்டிப் பகுதியில் இடம்பெற்றது. (16)

## கடல் கண்காணிப்புப் பணிக்கு ராடர் பொருத்திய பலூன்கள்

கடற் பகுதியைக் கண்காணிக்க ராடர் கருவிகள் பொருத்தப்பட்ட விசேட பலூன்களை இந்திய கடலோர காவற்படை பயன்படுத்தவுள்ளதாக சென்னைத் தகவலொன்று தெரிவிக்கின்றது.

இந்த விசேட பலூன்கள் ஒவ்வொன்றும் ஐந்து கோடி ரூபா பெறுமதியானவையாம்.

இவற்றை வெளிநாடுகளிலிருந்து வாங்குவதற்கான அனுமதியை இந்திய மத்திய அரசிடம் கடலோர காவற்படை கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இடம்பெயர்ந்த தீவக மக்களுக்கு நடமாடும் நூலக சேவை!

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து யாழ் குடாநாட்டில் அகதி முகாம்களிலும், உறவினர், நண்பர்களினது வீடுகளிலும் தங்கியுள்ள மக்களினது வசதி கருதி நடமாடும் நூலக சேவை ஒன்றினை நடாத்துவதற்கு வேலணை பிரதேச சபை முன்வந்திருக்கின்றது.

வேலணைப் பிரதேச சபை நூலகத்தில் கடமையாற்றிய புங்குடுதீவு, வேலணை, மண்டைதீவு ஊழியர்கள் இப் பணியில் ஈடுபடுத்தப்படுவர். (19)

## மூளைக்காய்ச்சலுக்கு தென்மராட்சியில் ஒரே வாரத்தில் இருவர் பலி!

ஒரு வாரத்தில் மட்டும் சாவகச்சேரியில் மூளைக் காய்ச்சலுக்கு வயோதிப மாதும், இளைஞரும் பலியானார்கள்.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த சந்தையா அன்னம்பிள்ளை (75) என்பவரும் வசாவிளானிலிருந்து இடம் பெயர்ந்து மந்துவிலில்தங்கியிருந்த எம். இரவீந்திரன் (20) என்பவருமே மூளைக்காய்ச்சலுக்குப் பலியானவர்களாவர். (16)

## யாழ்.மருத்துவ பீடவிவகாரம்; அமைச்சரின் அறிவிப்பை உதாசீனம் செய்கிறது ஆணைக்குழு!

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விடயத்தில் உயர் கல்வி அமைச்சர் ஹமீத்தின் பணிப்புரையைப் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு உதாசீனம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மருத்துவ பீடத்தை யாழ்ப்பாணத்துக்கு வெளியே ஏன் இடமாற்றக் கூடாது என்பதற்கு விளக்கமளிக்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முன்னர் யாழ் பல்கலைக்கழக நிருவாகத்தைக் கேட்டிருந்தது.

இது தொடர்பாக இங்குள்ள பொது அமைப்புக்கள் பலத்த ஆட்சேபம் தெரிவித்ததையடுத்து மருத்துவ பீடம் எக்காரணம் கொண்டும் இடமாற்றப்படவோ, மூடப்படவோ மாட்டாது என உயர்கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ் ஹமீத் பின்னர் அறிவித்திருந்தார்.

இவ் அறிவிப்பு விடுக்கப்பட்டுப் பல வாரங்களாகி விட்டபோதிலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தனது 'பிடியை' கைவிட்டதாகத் தெரியவில்லையெனவும் அமைச்சரின் உத்தரவை உத்தியோக பூர்வச் சுற்று நிருபமாக வெளியிட இதுவரை அது முயலவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கூட்டுறவு தலைமைப் பதவிகளை அரசியல் பிரமுகர்கள் வகிக்கத் தடை!

கூட்டுறவுத் தலைமைப் பதவிகளை அரசியற் பிரமுகர்கள் இனி வகிக்கமுடியாது.

இதற்கான தற்போதைய நடைமுறையை மாற்றியமைக்கும் புதிய மசோதா இம்மாதம் 6-ம்திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற மற்றும் மாகாண, நகர சபைகளின் உறுப்பினர்கள் போன்ற அரசியற் பிரமுகர்கள் இப் புதிய சட்டமூலத்தினால் கூட்டுறவுத் தலைமைப் பொறுப்புகளில் இனி பதவி வகிக்கமுடியாது.

அத்துடன் கூட்டுறவு நிருவாக சபையில் 18-93 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் ஆகக் குறைந்தது இருவராவது அங்கத்துவம் பெறுவது இப்புதிய சட்டமூலத்தின்படி கட்டாயமாக்கப்படவுள்ளது.

### பயிற்சி

இனிமேல் நடைபெறும் ஆசிரியர் சேவைக் காலப் பயிற்சி வகுப்புக்கள் மாணவரின் கல்வி பாதிக்கப்படாத வகையில் பாடசாலை விடுமுறைக் காலத்தில் நடைமுறைப் படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய சேவைக் காலப் பயிற்சிகளைத் திட்டமிடும் செயலமர்வு ஒன்று பெப்ரவரி 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிற் குமாரசாமி மண்டபத்தில் முழுநாள் நிகழ்ச்சியாக நடைபெறவுள்ளது (04)

## பிராயச்சித்தம்

கேற் திறக்கும் சத்தம் கேட்டு சாம்பசிவம் நிமிர்ந்து பார்த்தார்.

கையில் பூத்தட்டுடன் சாரதா வந்து கொண்டிருந்தாள். காலை ஆறு மணிக்கே தோய்ந்து நெற்றியில் விபூதிக்குறியுடன், நடுவில் பொட்டுடனும் காட்சியளித்த சாரதாவைக் கண்டதும் அவர் உள்ளம் குளிர்ந்தது.

'இண்டைக்கு வெள்ளிக்கிழமையெண்டு உன்னைப் பார்க்கவே தெரியுதம்மா' என்று சொன்னவர் 'சபேசன் பஜனைக்குப் போறானாமே, மெய்தானா' என்று கேட்டார்.

'ஓம் மாமா, அவர் இப்ப குடிக்கிறேல்லை, மூன்று மாத மாச் சம்பளச் செக் மாத்தேல்லை' என்றாள்.

'கையிலை காசில்லை - அதனாலை குடிக்கிறேல்லை அப்படித்தானே'.

'இனி அவர் குடிக்க மாட்டாராம். சத்தியம் பண்ணியிருக்கிறார்' என்றாள்.

'கேட்கச் சந்தோசமாயிருக்கு. சரியம்மா நீ பூவைப் புடுங்கு' என்று சொல்லி விட்டுப் போனார்

அன்று மாலை சபேசன் அதிர்ஷ்ட வசமாகச் செக்கை மாற்றி விட்டான்.

சட்டைப் பையில் பணத்துடன் வரும் வழியில் வீதியோரம் போத்தலில் விற்கப்படும் பெற்றோல் அவன் பார்வையில்பட்டது.

'சாராய நிறத்தில் கூட பெற்றோல்' என மனதில் சொல்லிக் கொண்டான். உடன் சாராயத்தின் நினைவு வந்தது. அனுபவித்த நாக்கு 'கொண்டு வா' என்று துடித்தது.

'ஒரு ட்றாம் அடிப்பம். சாரதாவுக்குத் தெரிய வராது' மனக்குரங்கு தாவியது.

'வேண்டாம், மூன்று மாதமாய் விட்டாச்சு, தொடக் கூடாது. சாரதா கோவிப்பாள்.'

இது அவனது அந்தராத்மாவின் குரல். மனதில் பெரும் போராட்டம்.

'இண்டைக்கு மட்டும். இனி இல்லை' மனம் வென்றது. கால்கள் குச்சொழுங்கைக்குள் இறங்க, யாராவது கவனிக்கிறார்களா எனக் கண்கள் பாதுகாப்பு வழங்க சாராயக் கடைக்குப் போனான்.

சாராயக் கடையில் இருந்து வெளியே வந்த சபேசனின் கண்கள் பீடாக் கடையைத் தேடின.

'பீடா போட்டால் வாய் மணக்காது' மனம் சமாதானத் தீர்வை முன்வைத்தது.

பீடா வாங்கிச் சப்பிய வண்ணம் வீட்டை நோக்கி நடந்தான் 'சாரதாவுக்குத் தெரியக் கூடாது' என மனம் அடிக்கடி நினைவுறுத்தியது

கேற்றைத் திறக்கும்போதே தான் குடிக்கவில்லையெனக் காட்டுவதற்காக புன்சிரிப்புடன் உள்ளே கால் வைத்தான்.

வெளி விறாந்தையில் நின்ற சாரதா இவனுடைய சிரிப்பிலேயே விபரீதம் நடந்து விட்டதை உணர்ந்தாள்

'ஆரிட்டை செக் மாத்தினீங்க' சற்று உரக்கவே கேட்டாள்,

'செக்... செக் ஆர் சொன்னது மாத்தினாளெண்டு' தப்புத் தடுமாறிச் சொன்னான்,

'குடிக்க எங்காலை காசு?'

'குடிக்க... ஆர் சொன்னது நான் குடிச்சதெண்டு' தடுமாற்றம் கூடியது.

சாரதா ஒன்றும் பேசாது ஹோலுக்குள் போய் இருந்தாள். அவள் கண்களில் கண்ணீர்,

உள்ளே வந்த சபேசன் 'சாரதா, மனம் கேக்கலை; குடிச்சிட்டன் கோவிக்காதை, இனிக் குடிக்க மாட்டன்' என்று கெஞ்சும் பாவனையில் கூறினான்.

'மனம் எப்பதான் கேக்கப் போகுது. ஏன் இப்படிக் குடிச்சுக் குட்டிச் சுவராகிறீங்கள். சாம்பசிவ மாமா கூட காலை விசாரிச்சார்' என்றாள்.

சபேசன் குடித்த சாராயம் இப்போதுதான் வேலை செய்யத் தொடங்கியது

'குட்டிச் சுவராகிறனா? ஆர்ந்த சாம்பசிவம், என்ரை காசிலை நான் குடிக்கிறன். பரமசிவன் கூடக் கேக்கேலாது' சத்தம் போட்டான்.

அதிர்ந்து போனாள் சாரதா, வாயடைத்துப் போய் கணவனை ஒரு கணம் பார்த்தவள், மௌனமாக எழும்பிச் சமையல் அறைக்குள் போனாள்.

சாரதா போவதைச் சில விநாடிகள் பார்த்தவன் தனது அறையிலுள்ள கட்டிலில் உடுத்த உடுப்புடனேயே படுத்தான்.

இரவு சமையல் செய்யும்போது சற்று முன் நிகழ்ந்த சம்பவம் மனதை நெருடியது

''மனம் கேக்கேல்லை குடிச்சிட்டன் கோவிக்காதை'' என்று குழந்தைபோல கெஞ்சியவரை எதிர்த்துப் பேசி விட்டேன்'' என மனம் வருந்தினாள்.

''மூன்று மாதம் குடிக்காமல் இருந்தவர் மனம் கேக்காமல் குடிச்சிட்டார். பெரிசுபடுத்தாமல் விட்டிருக்கலாம்'' மனம் இடித்துரைத்தது

பொரியல் என்றால் விரும்பிச் சாப்பிடுவார் என எண்ணியவள் வடகமும், அப்பளமும் பொரித்தாள். இரவு எட்டு மணியளவில் சாப்பாட்டு மேசையில் பரிமாறிவிட்டுக் கணவனை எழுப்பப் போனாள்.

சபேசன் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தான். சில விநாடிகள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். நெற்றியில் துளிர்த்த வேர்வைத் துளிகளைக் கணவு துவாயினால் துடைத்தாள்.

திடீரென விழித்த சபேசன் சாரதாவைப் பார்த்தான் ''விடிஞ்சிட்டுதோ?'' என்று கேட்டபடி எழுந்தான்.

சாரதா சிரித்தபடி ''விடியேல்லை இப்ப எட்டுமணி. சாப்பிடவாங்க'' என்று சொன்னாள்.

அப்போதுதான் குடிவெறியில் தான் ஏசியது நினைவுக்கு வந்தது

தன் செயலுக்காகக் கூனிக்குறுகிப் போனவன் எழுந்து சாரதாவுக்குப் பின் மௌனமாகப் போனான்.

முகம் கழுவிவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தவன், தனக்குப் பிடித்த வடகப் பொரியலை முதல் கையிலெடுத்தான்.

மேசையில் ஒரு பிளேட் மட்டும் இருப்பதைப்பார்த்து ''எங்கே உன்னுடைய பிளேட்'' என்று கேட்டான்.

சாரதா சிரித்தபடி ''இன்றைக்கு நான் விரதம்'' என்றாள்

''விரதமா?''

''இன்றைக்கு மட்டும் - விரதமில்லை, பணிஷ்மென்ட்'' என்றாள்,

சபேசனுக்குப் புரியவில்லை. மனைவியைக் கண் இமைக்காது பார்த்தான்.

— [illegible] பக்கம் பார் [illegible]

# சிறிய செய்திகள்

## 'பாடுமீன்' தகுதி பெற்றது

மயிலன்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்டு வந்த 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் மயிலன்காடு ஞானகலா விளையாட்டுக் கழகத்தை 3:2 கோல்கள் கணக்கில் தோற்கடித்து இறுதியாட்டத்தில் ஆடத் தகுதி பெற்றது. 16

## நிதி சேகரிப்பு போட்டிகள்

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவையின் நிதிக்காக மேற்படி கல்லூரி மைதானத்தில் இம் மாதம் 5-ம் திகதிமுதல் 12-ம் திகதி வரை தினமும் பிற்பகல் 3.15 மணிமுதல் இரு போட்டிகள் வீதம் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## குரக்கன் கொள்வனவு

குடாநாட்டில் உற்பத்தியாகும் குரக்கனை கொள்வனவு செய்வதற்கு தமிழீழ ஆய்வு நிறுவனம் தயாராக உள்ளதாகவும், 28 ரூபாமுதல் 35 ரூபா வரையும் உற்பத்தியாளர்களிடம் இருந்து குரக்கன் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

அரச அதிபர் தலைமையில் உதவி அரச அதிபர்கள், விவசாய உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்ட உணவு உற்பத்திக் குழுக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. 04

### நயினாதீவு...

இந்த ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல 01-01-1988 முதல் 05-07-1989 வரைக்கான ஆசிரியர் ஊக்குவிப்பு கொடுப்பனவும் இவர்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சியை முடித்துள்ள நயினாதீவுப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் அங்கு செல்லமுடியாமல் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் கடமைபுரிவதால் அங்கு ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன: 15

## முதல் அகதி அரியாலை வாசி

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய தமிழ் அகதிகளில் முதன் முதலில் கப்பலை விட்டிறங்கித் திருகோணமலை மண்ணில் கால் வைத்தவர் யாழ்ப்பாணம் மணியம் தோட்டத்தைச் சேர்ந்த சுரேஷ்குமார் (26) என்னும் இளைஞரே

இலங்கை திரும்பிய அகதிகளுக்குத் தமிழக அகதி முகாம்களில் இரண்டு மாத அகதி உதவிப்பணமாக 840 ரூபா வழங்கப்பட்டிருந்ததாம். 14

## ஊனமுற்றோர் சங்கக் கூட்டம்

வடமராட்சி உடல் ஊனமுற்றோர் சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் இம் மாதம் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவார்கள். 10

## பிரதமர் திருமலை விஜயம்

பிரதமர் டீ. பி. விஜேதுங்கா நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.

திருகோணமலையில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றம் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் அவர் அதிகாரிகளுடன் பேசினார்.

இந்தியாவில் இருந்து திரும்பிய தமிழ் அகதிகளையும் அவர் பார்வையிட்டார்.

### அரசாங்க...

முயற்சியும் சிங்களவரின் எதிர்ப்பினால் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது. இந்த நிலையில் ஐ. நா. சபையின் உதவியை நாடினால் அது நன்நோக்குடன் உதவி செய்து அமைதியான நிலையை ஏற்படுத்தும் என அக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

### ஜனசக்தி—

என்றார்.

தொடர்ந்து பேசிய அவர் ஜனசக்தி திட்டத்தால் இரு வருடங்களால் ஏழை மக்கள் 25 ஆயிரம் ரூபாவை பெறுகின்றதாக கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் ஏமாற்றப்படுகின்றனர் என்பதை அவர்களே புரிந்துகொள்வார்கள் என்றார்.

## பிராயச்சித்தம்

"என்ரை வாயிலிருந்து வரக்கூடாத சொல் வந்திட்டுது. உங்களை எதிர்த்துக் கதைச்சிட்டன். அதற்கு நானே எனக்குக் கொடுத்த தண்டனை" என்றாள்.

சில வினாடிகள் மௌனமாக மனைவியைப் பார்த்தான்.

"குற்றவாளிக்குத் தானே தண்டனை குற்றவாளி நான். தண்டனை உனக்கா?" என்று கூறியபடி சாப்பிடக் கையில் எடுத்த வடகத்தை வைக்கப் போனான்.

அதை வைக்கவிடாது கையைப்பிடித்த சாரதா "எனக்காகச் சாப்பிடுங்க" என்று கெஞ்சினாள்.

"உனக்காக நான் சாப்பிட்டால், எனக்காக நீ சாப்பிடுவியா" என்றான்.

சாரதா பதில் பேசாது பாதிவடகத்தை அவனுக்கு ஊட்டி விட்டு மிகுதியைத் தான் சாப்பிட்டாள்

"எங்கள் இருவருக்காக நான் இனி சாராயத்தைத் தொடமாட்டேன் சாரதா" என்று அவன் சொன்னபோது சாரதா உள்ளம் பூரித்துப் போனாள்.

- அபர்ணா

### ஜனவரியில் மட்டும்

# யாழ். மருத்துவ மனையில் 31 ஆயிரம் பேர் சிகிச்சை

கடந்த ஜனவரிமாதத்தில் மட்டும் யாழ் பொதுமருத்துவ மனையில் 31,000பேர் வரையில் (வெளிநோயாளர் பகுதியிலும், விடுதிகளிலும்) சிகிச்சை பெற்றுள்ளதாக ஆஸ்பத்திரி புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வெளிநோயாளர் பிரிவில் 25,000க்கு மேற்பட்டோரும், 5,373 பேர் மருத்துவமனையில் தங்கியும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அனேகமான நோயாளிகள் நெருப்புக் காய்ச்சல், மலேரியா, செங்கமாரி. வயிற்றுளைவு, வயிற்றோட்டம், தொய்வு போன்றனவற்றினால் பீடிக்கப்பட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் விடுதிகளில் மட்டும் 12 வயதிற்குட்பட்டவர்கள் ஐந்நூறுபேர் வரையில் சிகிச்சைபெற்றுள்ளனர்.

இவர்களில் வயிற்றோட்டத்தினால் மட்டும் 150க்கு மேற்பட்டோர் குழந்தைகள் சிகிச்சைவிடுதியில் கிசிச்சை பெற்றனர்.

கடந்த 12மாதங்களிலும்பார்க்க ஜனவரிமாதத்தில் நோயாளர்கள் சிகிச்சை பெற்றது அதிகம் எனவும் மருத்துவமனை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (07)

### வவுனியா மாவட்டத்தில்

## 3200 குடும்பங்களுக்கு வீடமைப்புப் புனர்வாழ்வு

வவுனியா மாவட்டத்தில் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உதவியோடும், அரசாங்க அதிபரின் அனுசரணையுடனும் 3200 குடும்பங்கள் வீடமைப்புத் புனர்வாழ்விற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வவுனியாவில் நடைபெற்ற வீடமைப்பு அமைச்சு நடமாடும் சேவையில் இக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன,

இச்சேவையின் போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் தமக்கு வீடுகட்டியிருப்பதற்கு நிலமில்லை என்றும் நிலமுள்ளவர்கள் வீடு கட்டப்பண வசதி இல்லையென்றும் குடிநீர்த் தட்டுப்பாடு குறித்தும் பல பிரச்சினைகளைச் சமூகமளித்திருந்த வீடமைப்பு அமைச்சரிடமும், அதிகாரிகளிடமும் முறையிட்டனர். 14

### மனித—

தித்தபோதே இவ்வாறு கேட்கப்பட்டது.

1989 இல் தியன்மென் சதுக்கத்தில் சீன மாணவர்களின் ஜனநாயக எழுச்சிக் கிளர்ச்சியை அடக்கியதிலிருந்து மனித உரிமை மீறல் பற்றி சீனா மீது அடிக்கடி குற்றஞ்சாட்டப்பட்டு வருவது தெரிந்ததே.

### சிங்களப்...

வீரபுரம் போன்ற சிங்களக்குடியேற்றம் பகுதிகளில் குடியமர்த்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

### கேட்கப்படும்...

வான் கடிதங்கள் அனுப்பி வைப்பதாகச் சொல்லப்படுகிறது.

அதனால்தான் யாழ் மாவட்டத்தில் அடிக்கடி முத்திரை, வான்கடிதங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது. 10

### மக்கள்...

சொந்தமான பல அசையாத சொத்துக்கள் திட்டமிட்டுத் தனியார் நிறுவனங்களுக்கு விற்கப்படுவதாகவும், இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் அது கோரியுள்ளது.

### அரச—

தெரிவித்திருப்பதாவது.

உலகிலேயே காணமற்போவோர் தொகை இலங்கையிலேயே அதிகமான தென்றும் படையினரால் கைது செய்யப்படுவோர் பற்றிய விவரங்கள் அவர்களது உறவினருக்குத் தெரிவிக்கப்படுவதில்லையென்றும் அச்செய்திகூறியது.

கொக்கட்டிச்சோலைப் படுகொலைச் சம்பவத்துக்கு இலங்கைப் படையினரே காரணம் எனஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்திருப்பதன் மூலம் இராணுவ அட்டூழியம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது இந்த ஒப்புதல் மூலம் இராணுவக் கெடுபிடி நிறுத்தப்படுமென்று என நம்புவதற்கு இல்லை எனவும் இராணுவ அட்டூழியங்கள் காரணமாக பொதுமக்களின் வாழ்க்கைமிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ்...

மீன் பிடித்துக்கொண்டிருக்கையில் படையினர் இவர்களை நோக்கித் துப்பாக்கிச் சூடுகளை மேற்கொள்வது தினமும் நடைபெறுவதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலையும் பாஷையூர் கடற்பரப்பில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை நோக்கி சிறுத்தீவு பக்கமாக இருந்து படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்றும், மீனவர்கள் தொழிலை மேற்கொள்ளாது திரும்பிவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது 07, 15

## ஜப்பான் பிரதமர் கோரிக்கை

ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பாதுகாப்புச் சபையில் ஜப்பானும் இடம்பெறவேண்டும் என ஜப்பானியப் பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய சபையின் பாதுகாப்புச் சபைக் கூட்டம் நேற்று முன் தினம் ஆரம்பமாகிய சந்தர்ப்பத்தில் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

### பிரதமர்...

படுகிறது.

இந்தியாவுக்கான அமெரிக்க பொருளாதார மற்றும் இராணுவ உதவிகள் குறித்தும் ஆராயப்பட்டது.


## மாபெரும் வெகுஜனப் போராட்டம்- 05. 02. 1992

தமிழீழ மக்களே!

எம் மண்ணை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தையும், இராணுவ நடவடிக்கைகளையும், பொருளாதார அழுத்தங்கள், விலைவாசிகளின் ஏற்றங்கள், மாணவர்களின் கல்விப் பாதிப்புக்கள், சுகாதாரப் பாதிப்புக்கள், குழந்தைகளின் போஷாக்கின்மை, கடற்தொழில், விவசாயப் பாதிப்புக்கள், ஏழைத் தொழிலாளர்களின் வேலையிழப்புக்கள் போன்ற கோரிக்கைகளை முன் வைத்து எதிர்வரும் 05.02 1992 புதன்கிழமை நடைபெற இருக்கின்ற மாபெரும் வெகுஜன மறியற் போராட்டத்திற்கு மக்களை அணிதிரளும் படி வேண்டுகின்றோம்.

இம் மறியல் போராட்டம் யாழ் மாவட்ட அரச அதிபர் பணிமனையில் காலை ஆரம்பமாகும். இவ் வெகுஜனப் போராட்டத்தன்று சகல சுருட்டு உற்பத்தி நிலையங்களும் மூடப்படும். அன்று சகல உற்பத்தி உரிமையாளர்களும் சகல தொழிலாளர்களும் கலந்து கொள்ள வேண்டும் என சங்க நிர்வாகக்குழு கூடி தீர்மானம் எடுத்துள்ளது. இத் தீர்மானத்தின் படி சகல சுருட்டு உற்பத்தியாளர்களையும், சகல தொழிலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம், தலைமைச் செயலகம். 71, காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.

இரா. சுந்தரலிங்கம் செயலாளர்.

02007


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 02-02-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.